

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு மண்டலத்தில் வால்மீகி தெருவில் இரவு நேரத்தில் கழிவுநீர் பிரதான குழாயில் தூர்வாரும் பணிகள் சென்னைக் குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டது.

**செய்தி வெளியீடு எண்.30** **நாள் : 15.11.2021**

## சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் பருவமழையை முன்னிட்டு தற்போது நாளொன்றுக்கு 912 எம்.எல்.டி வரையிலான கழிவுநீர் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது,

## சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 302 எண்ணிக்கையிலான கழிவுநீர் நீரேற்றும் நிலையங்கள் மூலம் 24 மணிநேரமும் கழிவுநீர் உறிஞ்சப்பட்டு 5 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முறையாக வெளியேற்றப்பட்டு வருகிறது. பருவமழைக்கு முன்னதாக நாள் ஒன்றுக்கு சராசரியாக 580 எம்.எல்.டி அளவிலான கழிவுநீர் உறிஞ்சப்பட்டு

சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், பருவமழையை முன்னிட்டு நாளொன்றுக்கு தற்போது 912 எம்.எல்.டி வரையிலான கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டு வருகிறது.

சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் கடந்த 3 நாட்களாக இரவு நேரங்களில் கழிவுநீர் கட்டமைப்புகளில் உள்ள கசடுகளை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்கள் அடங்கிய 200 பணிமனைகளில் கடந்த 3 நாட்களில் இரவு நேரங்களில் கழிவுநீர் கட்டமைப்புகளில் உள்ள கசடுகளை அகற்றும் பணியில் 350 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 2000 களப்பணியாளர்கள் தொடர்ந்து இரவு நேரங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். கடந்த 3 நாட்களில் மொத்தம் 2876 தெருக்களில் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகளில் உள்ள கசடுகளை தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 6,367 இயந்திர நுழைவாயில்கள் தூர் வாரப்பட்டன. இப்பணிகள் தொடர்ந்து நடைபெறும்.

இப்பணிகளில், 54 எண்ணிக்கையிலான நீர் உறிஞ்சும் வாகனங்கள், கழிவுநீர் செல்லக்கூடிய பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரிசெய்வதற்காக 142 எண்ணிக்கையிலான ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர்க் குழாய் இணைப்புகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்து தூர்வாரும் பணிகள்

மேற்கொள்ள ஏதுவாக 260 எண்ணிக்கையிலான தூர்வாரும் ஆட்டோக்கள் கழிவுநீரினை அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கழிவுநீர், குடிநீர்க் குழாய்களில் கலக்காமல் இருப்பதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கழிவுநீர் செல்லும் பிரதான குழாய்களில் தூர்வாரி, பராமரிப்பு பணிகள் கடந்த ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டு தற்போது அடைப்பு ஏதும் இல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்